Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

# வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 64 கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. சங்.136:1 மார்ச் 2018 No.3

## கர்த்தருடைய பணியில் வளர்ந்து பெருகுதல்

**Abound in the work of the Lord**

Rich Carmichael

வேதபகுதி : மத்தேயு 9:35-38

சரீர பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் தேவையுள்ளவர்களைக் குறித்து கர்த்தர் அதிக கரிசனையுள்ளவர். அவர்களுக்குக் காண்பிக்கப்படும் தேவ அன்பை ஏற்றுக்கொண்டு பிரதிபலிக்க அனேகர் ஆயத்தமாயிருப்பதை அவர் அறிவார். இத்தகைய மக்களை அவருடைய அன்புடன் சென்றடைய அவரது அறுவடைப் பணியில் நாம் அவரோடு இணைந்து செயல்பட அவர் விரும்புகிறார்.

இயேசு தாமே இப்பணியில் தீவிரமாயிருந்தார். சீஷர்களிடம் "...நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" என்றார் யோவா.4:34. சமாரியாவில் ஊழியம் செய்தபோது இதனைக் கூறிய அவர் ஒரு சமாரியப் பெண்ணையும் அவளது பட்டணத்தாரையும் தேவனிடம் வழி நடத்தினார். இழந்து போனதை தேடுவதும் இரட்சிப்பதும் லூக்.19:10 அவருடைய இருதய ஆவலாயிருந்தது. அதற்காகவே பிரசங்கிக்கவும், போதிக்கவும், குணமாக்கவும் செய்து ஆவிக்குரிய சரீர உதவிகளை மக்களுக்குச் செய்தார். மத்.20:28ன்படி அவர் "ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அனேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்". மக்கள் தேவனை அறிந்து கொள்ளும்படி அவர் வாழவும், மரிக்கவும் தயங்கவில்லை.

எனவே அவர் அறுவடைக்கு நேராகவும், செய்யப்பட வேண்டிய பணிக்கு நேராகவும் நமது கவனத்தைத் திருப்புகிறார். "அறுப்புக்காலம் வருவதற்கு இன்னும் நாலு மாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்?" யோவான்4:35. நாம் அவருடைய கரங்களாகவும், கால்களாகவும், குரலாகவும், இழந்து போன ஆத்துமாக்களை இரட்சிக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். காலம் சமீபித்திருக்கிறது. எனவே நாம் காலத்தை பயன்படுத்த வேண்டும்.

"நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராததென்று அறிந்து, நீங்கள் உறுதிபட்டவர்களாகவும், அசையாதவர்களாகவும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" 1 கொரி.15:58.

கர்த்தருடைய பணி கடினமாயிருக்கலாம்; கர்த்தருக்குள் நீங்கள் படும் 'பிரயாசம்' வீணாகாது என பவுல் எழுதுகிறார். 'பிரயாசம்' என்பதற்கு பயன்படுத்தப்பட்ட கிரேக்க பதம் Kopos என்பது கடின உழைப்பால் களைத்துப் போவதை வலியுறுத்துகிறது. தேவ பணியை செய்வது மகிழ்ச்சியைத் தருவதாயிருந்தாலும், அது கடினமானது என்பதை உணர்ந்த பவுல், கடின உழைப்புக்கு மாதிரியாயிருந்தார் 1 கொரி.15:10. நாம் பிரசங்கிக்கவோ, போதிக்கவோ, கொடுக்கவோ, ஜெபிக்கவோ, சுவிசேஷம் சொல்லவோ, தலைமைவகிக்கவோ, உபசரிக்கவோ அல்லது சேவை செய்யவோ எந்தப் பணியில் ஈடுபட்டிருந்தாலும் இப்பணி சில வேளைகளில் நமக்குக் கடினமாயிருக்கலாம். அவரது பணிக்கான ஆதாரத்தை கர்த்தர் அளிக்கிறார்.

மேலும் நீங்கள் எல்லாவற்றிலேயும் எப்பொழுதும் சம்பூரணமுள்ளவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயும் இருக்கும்படியாக தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார். 2கொரி.9:8. அவருடைய பணியில் நாம் பெருக அவரது கிருபை நம்மில் பெருகியிருக்கிறது. மேலும் அவரது பணிக்குத் தேவையான ஆதாரங்களை அவர் அளிக்கிறார்.

அவரது கிருபை மட்டுமல்ல அவரே நம்மில் வாசம் பண்ணுகிறார். யோவா.14:10ல் இயேசு "என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார்" என்றார். கொலோ.1:29-ல் அப்.பவுல், "நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப் படுகிறேன்" என்கிறார். எனவே நம்மிலும் நம்மூலமாகவும் ஆண்டவரின் பிரசன்னம் கிரியை செய்ய நாம் அவரை சார்ந்து கொள்ள முடியும். மத்.28:26ல் இயேசு புறப்பட்டுப்போய் எல்லா ஜாதியையும் சீஷராக்கும்படி கட்டளையிட்டார். தாம் எப்போதும் கூட இருப்பதாகவும் வாக்குப்பண்ணினார். அவர் 2 தெச.2:17ன்படி நமது இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும், நற்கிரியையிலும் நம்மை ஸ்திரப்படுத்துவார்.

கர்த்தருடைய பணியில் குறைவுபடுகிறீர்களா? தைரியம் குறைவா? அப்.4:13ல் கூறப்பட்டபடி சனகெரிப் சங்கத்தால் பேதுருவும் யோவானும் பயமுறுத்தப்பட்டபோது தேவபணியில் தொடர ஆண்டவர் தைரியப்படுத்தினதை எண்ணிப் பாருங்கள்! அப்.4:31ல் அப்போஸ்தலர் ஜெபித்தபோது அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு வசனத்தை தைரியமாய்ப் பேசினார்கள். உங்களில் பெலன் குறைவா? உற்சாகம், ஞானம், வல்லமை ஏதேனும் குறைவா? அவரது பெலத்தால் எல்லாவற்றையும் நாம் செய்ய முடியும். யோவான்.14:12,13 வசனங்களைப் படியுங்கள். அவரது பிரசன்னத்தால் அவரது பணியில் நாம் பெருகமுடியும். நாம் அவரில் நிலைத்திருந்தால் அவரும் நம்மில் நிலைத்திருந்து நாம் அதிக கனி கொடுக்கச் செய்வார் யோவான்15:5.

### ஆண்டவருடைய பணி முக்கியமானது

ஒருநாள் வருகிறது. அன்று, "அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதைவிளங்கப் பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும், அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளது என்று அக்கினியானது பரிசோதிக்கும்" 1 கொரி.3:13. வாழ்வில் அநேக காரியங்கள் நிலையற்றவை. ஆனால் கர்த்தருக்காகச் செய்யப்படும் பணி நிலையானது. 'அது விருதாவல்ல'. கிறிஸ்து மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு உயிரோடு எழுந்தார். அவர் மீண்டும் வரப்போகிறார். அவரது வாழ்வு, அன்பு ஆகியவற்றைக் குறித்து நாம் பிறருக்கு பகிர்ந்து கொள்வது தற்காலத்திற்கும், நித்திய காலத்திற்கும் பயனளிக்கக் கூடியது.

ஆண்டவரது பணி ஆண்டவருக்கு ஏற்புடையது. எபி.6:10ன்படி "ஏனென்றால் உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும், செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே". நாம் பணிசெய்து அவரது ஜனங்களுக்கு அவரது அன்பினைக் காண்பிக்கிறோம். இந்த சிறியரில் ஒருவருக்கு நாம் எதைச் செய்கிறோமோ, அதை ஆண்டவருக்கே செய்கிறோம். ஒருநாள் நமது பிரயாசத்திற்குரிய பரிசு வழங்கப்படும் 1கொரி.3:8.

(3-ம் பக்கம் பார்க்க)

# வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)



முகவரி: வருகையின் தூதன் நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001
**Mobile:** 95432 21008 **e.mail:** varukayinthoothan@hotmail.com



Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony


## வாக்குத்தத்தம்

இனி நீ அழுதுகொண்டிராய்; உன் கூப்பிடுதலின் சத்தத்துக்கு அவர் உருக்கமாய் இரங்கி, அதைக் கேட்டவுடனே உனக்கு மறுஉத்தரவு அருளுவார். *ஏசா. 30:19*

## வாசகருக்கு என் அன்பு கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2018ம் ஆண்டின் மார்ச் மாத தூதனுக்காக அடியேன் ஆண்டவரை நன்றியோடும் தாழ்மையுடனும் துதிக்கிறேன்.

### E.W.M. ஜெபவீடு, புதுக்கோட்டை - 27.01.2018

ஜனவரி மாதம் 26-ம் தியதி மாலை 6.00 மணிக்கு நாகர்கோவிலிருந்து ஒரு வாகனத்தில் புறப்பட்டு, நடுஇரவு 2.00 மணிக்கு புதுக்கோட்டை போய் சேர்ந்தோம். காலை 9.00 மணி முதல் 5.00 மணி வரை உபவாச ஜெபத்தை ஆண்டவருக்கு மகிமையாக நடத்திவிட்டு மாலை 6.30 மணிக்கு புறப்பட்டு நடு இரவு 1.00 மணிக்கு வீடு வந்து சேர தேவன் இரக்கம் பாராட்டினார்.

1. 15-ம் தியதி முதல் 25-ம் தியதிவரை கடுமையான வறட்டு இருமலினாலும் (Dry cough) ஜுரத்தினாலும் அடியேன் அதிக மாக கஷ்டப்பட்டு, வியாதியினால் பெலவீனமாய் இருந்தேன். அன்பின் ஆண்டவருடைய கிருபை அதிகமாய் தாங்கினதால் அதிக உற்சாகமாய் உபவாச ஜெபத்தை நடத்த முடிந்தது.
2. பாஸ்டர் T.M. அலெக்ஸ் பாண்டியன் அவர்களும் குடும்பத்தினரும் ஜெபத்தோடு நேர்த்தியாய் உபவாச ஜெபத்தை ஒழுங்கு செய்து, 100 பேர்களுக்கு அதிகமானோரிடம் பதிவுதாள் களை நிரப்பி வாங்கியிருந்தார்கள். உபவாச ஜெபம் மிகவும் ஆசீர்வாதமாய் இருந்தது.
3. வேறு சபைகளைச் சார்ந்த சில அன்பான ஊழியர்கள் வந்ததும், ஜெபித்ததும், ஐக்கியம் கொண்டதும் ஆண்டவருக்கு அதிக மகிமையாயிருந்தது.

உபவாச ஜெபங்களுக்காக பாரத்தோடு ஜெபிக்கும்படி உங்களை மிகவும் பட்சமாய் கேட்கிறேன். மார்ச் மாத உபவாச ஜெபம் 17.03.2018 பாண்டிச்சேரி, அரியாகுப்பம் அசெம்பிளி ஆப் காட் சபை.

### எழுப்புதலுக்காக ஜெபிக்க 100 பேர் - Revive 100

இது திட்டமல்ல, தூதன் வாசகரில் 100 பேர், குறிப்பாக எழுப்புதலுக்காக ஜெபிக்க தேவை. இந்த மாதம் புதிதாக ஒரு சகோதரி வாக்கு கொடுத்திருக்கிறார். அவர்களுக்காக தேவனை துதிக்கிறேன். இன்னமும் 82 நபர்கள் தேவை.

| கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி: | வங்கி கணக்கு எண் |
|---|---|
| **வருகையின் தூதன்**<br>நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் – 629 001<br>VARUKAYIN THOOTHAN<br>Newport Street, Nagercoil-629 001.<br>**Mobile:** 95432 21008<br>**email:**<br>Varukayinthoothan@hotmail.com | VARUKAYIN THOOTHAN<br>A/c. No.:431521036<br>Indian Bank,<br>W.C.C. Road, Nagercoil-1<br>IFS Code : IDIB000N006<br>வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள் |

ஜெபமே ஜீவன், ஜெபம் ஜெயம், ஜீவியத்திற்கிதுவே சட்டம். தேசத்திற்காக ஜெபிக்க உங்களை அர்ப்பணம் செய்ய மாட்டீர்களா? "நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்" எசேக். 22:30

1. CN 00536 M சென்னை
2. KK 04765 M ஆரல்வாய்மொழி
3. MD 01090 M மதுரை
4. VN 00980 M ஸ்ரீவில்லிபுத்தூர்
5. TN 02014 S தச்சநல்லூர்
6. NI 01279 M குஜராத்
7. NC 01088 M நாகர்கோவில்
8. MD 00661 Y மதுரை
9. VN 00947 S சாட்சியாபுரம்
10. CN 02362 Y சென்னை
11. TJ 00275 R சீர்காழி
12. CN 01915 S சென்னை
13. TN 01607 Y திருநெல்வேலி
14. KK 03974 M நாகர்கோவில்
15. KK 00493 M நாகர்கோவில்
16. SA 01567 G நெய்வேலி
17. CN 01446 L சென்னை
18. NC 00483 S நாகர்கோவில்

| மாதம் | தேதி | இடம் |
|---|---|---|
| மார்ச் | 17-03-2018<br>3-வது சனி | அசெம்பிளி ஆப் காட் சபை,<br>அரியா குப்பம், பாண்டிச்சேரி |
| ஏப்ரல் | 14-04-2018<br>2-வது சனி | தமிழ் மெதடிஸ்ட் சபை,<br>மும்பை |
| மே | 19-05-2018<br>3-வது சனி | கிரேஸ் அசெம்பிளி ஆப் காட் சபை,<br>தஞ்சாவூர் |
| ஜுன் | 16-06-2018<br>3-வது சனி | பெங்களூர் |
| ஜுலை | 21-07-2018<br>3-வது சனி | கன்மலை ஆராதனை சபை,<br>நெல்லிக்குப்பம், கடலூர் |
| ஆகஸ்ட் | 18-08-2018<br>3-வது சனி | விசுவாச ஜெப சபை,<br>கல்லக்குறிச்சி, விழுப்புரம் |
| செப்டம்பர் | 15-09-2018<br>3-வது சனி | அசெம்பிளி ஆப் காட் சபை,<br>தேனி |
| அக்டோபர் | 18-10-2018<br>3-வது வியாழன் | அந்தமான் |
| நவம்பர் | 17-11-2018<br>3-வது சனி | திருவனந்தபுரம் |
| டிசம்பர் | 01-12-2018<br>1-வது சனி | விக்டரி அசெம்பிளி ஆப் காட் சபை,<br>வடக்கன்குளம், நெல்லை மாவட்டம். |

### தரிசனம் 2019 - Vision 2019

ஆண்டவருக்குச் சித்தமானால் (யாக்கோபு 4:15) 2019-ம் ஆண்டு, **எழுப்புதலுக்காக இதய கதறல்**

உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபத்திற்கு, உங்கள் சபை கட்டடத்தை ஒரே ஒரு விசை திறந்து தருவீர்களா? தொடர்புக்கு: **94897 40295**

| மாதம் | தேதி | இடம் |
|---|---|---|
| ஜனவரி | 19-01-2019<br>3-வது சனி | பிலதெல்பியா சபை,<br>கோயம்புத்தூர் – 5 |
| பிப்ரவரி | | |
| மார்ச் | | |
| ஏப்ரல் | | |
| மே | | |
| ஜுன் | | |
| ஜுலை | | |
| ஆகஸ்ட் | | |
| செப்டம்பர் | | |
| அக்டோபர் | | |
| நவம்பர் | | |
| டிசம்பர் | | |

(7-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் கர்த்தருக்காகச் செய்கிற பணி நாம் பணிவிடை செய்கிற மக்களுக்கும் பயனுள்ளது. ஆண்டவர் திரும்ப வரும்போது நம் மூலமாக கிறிஸ்துவுக்குள் கொண்டுவரப்பட்ட வர்களாலும் அதிக மகிழ்ச்சியடைவோம். *1தெச.2:19-20* வாசிக்க.

இவையெல்லாவற்றிலும் மிகுந்த ஆசீர்வாதம் என்னவென்றால் நமது பணி கர்த்தருக்கு மகிமையைக் கொண்டு வருகிறது. இயேசு, பிதா தமக்கு கட்டளையிட்ட பணிகளை செய்து முடித்து அவரை மகிமைப்படுத்தினார் யோவான்*17:4*. ஆக அவர் நமக்கு ஒப்படைத்த பணிகளை முடிப்பதால் பிதா மகிமைப்படுவார் மத்.*5:16*; *1*பேது.*2:12*. "நற்கிரியைகளை செய்கிற தற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டவர்கள்'' எபே.*2:10*. "அவர் நம்மைச் சகல அக்கிரமங்களி னின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியை களைச் செய்ய பக்திவைராக்கியமுள்ள வர்களாகவும் நம்மை சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார் தீத்து *2:14*. "தன்னை சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாக்கப் பட்டதும், எஜமானுக்கு உபயோக மானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்த மாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பது 2 தீமோத்.*2:21* எத்தனை பெரிய சிலாக்கியம்! நாம் உத்தமமாக அவரது பணியை நிறை வேற்றும்போது அவர் கனப்படுத்தப் பட்டு மகிமைப்படுகிறார்.

### அவர் பணியில் முன்னேறிச் செல்லுங்கள்

நீங்கள் இப்பணியில் களைத்து, சோர்ந்து போய்விட்டீர்களானால் ஏசா.*40:29*ன்படி சோர்ந்து போகிற வனுக்கு பெலன் கொடுத்து, சத்துவ மில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிற கர்த்தரை நோக்கிப் பாருங்கள். அவர் உங்களைப் புதுப்பித்து, பெலனளித்து, அவரோடு நடப்பதிலும், அவருக்காக உழைப்பதிலும் உதவி செய்வார். கர்த்தரிடமிருந்து பெற்ற ஊழியத்தை கடைசிவரை காத்து நிறை வேற்றுங்கள் கொலோ.*4:17*. அப்படிச் செய்வதால் அப்போஸ்தலனாகிய பவுலோடு சேர்ந்து அந்த நாளிலே ''நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக் கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் '' 2 தீமோத்.*4:7-8* என்று கூறலாம்.

> நாம் ஆர்ட்டீஷியன் நீரூற்றைப் போல நீர் தானாக சுரந்து வருகிற அனுபவமுடையவர்களாயிருக்க தேவன் விரும்புகிறார். ஆனால் இன்று ஊழியக் காரர்கள் பீடங்களில் நின்று நீர் சுரந்து வர பிரயாசப்படுகிறார்கள்.

# ஊழியம் செய்ய ஆவியானவரின் வல்லமை தேவை

## The Spirits Power for Service

D.L.Moody

''வேத வாக்கியம் சொல்லு கிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக் கிறவன் எவனோ, அவன் உள்ளத்தி லிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்'' யோவா.*7:38*.

நாம் ஆர்ட்டீஷியன் நீரூற்றைப் போல நீர் தானாக சுரந்து வருகிற அனுபவமுடையவர்களாயிருக்க தேவன் விரும்புகிறார். ஆனால் இன்று ஊழியக் காரர்கள் பீடங்களில் நின்று நீர் சுரந்து வர பிரயாசப்படுகிறார்கள். நானும் பல வேளைகளில் இவ்வாறு பிரயாசப்பட்டி ருக்கிறேன். எப்படியெனில் ஊழியக் காரர்கள் பீடத்தில் நின்று பேசிக் கொண்டேயிருக்க மக்கள் தூங்கி விடு கிறார்கள். அவர்களை எழுப்ப முடிய வில்லை. காரணம் ஜீவ தண்ணீர் இல்லாததுதான். கிணற்றில் நீர் இல்லாம லிருக்கும்போது எப்படி வெளியேற்ற முடியும். கிணற்றில் நீர் நிரம்பியிருக்க வேண்டும்.

தேவ ஆவியானவர் நமது ஊழியத்தில் இருக்கும்போது நாம் அபிஷேகிக்கப்பட்டவர்களாயிருப் போம். அப்போதுதான் பெரிய காரியங் களைச் செய்ய முடியும். "தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும் வறண்ட நிலத்தின் மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்'' ஏசா.*44:5*. "நீதியின்மேல் பசிதாகமுள்ள வர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள்'' மத்.*5:6*.

### வழிந்தோடும் நீரோடைகள்

ஜீவ தண்ணீர் நிறைந்த மக்களை நான் பார்க்க விரும்புகிறேன். அவர் களால் அதை அடக்கிக் கொள்ள முடியாதபடியால் அவர்கள் வெளியே சென்று தேவ கிருபையின் சுவிசேஷத் தைப் பிரசாரம் செய்கிறார்கள். நாமும் ஆவியால் நிரப்பப்படும்போது அதை அடக்கிக் கொள்ள முடியாமல் தேவ பணிக்காக ஆயத்தமாகிவிடுவோம்.

தேவ ஆவி நம்மேல் தங்கியிருக்க வேண்டும். அப்படியானால் உலகத்தின் மேலும், மாம்சத்தின் மேலும், பிசாசின் மேலும் வெற்றிபெற முடியும். நம்மில் காணப்படும் அனைத்து தீமைகளையும் காலின் கீழ் மிதித்து வெற்றி பெற முடியும். மக்கள் நம்மிடம் வந்து, "நீ எப்படி மேற்கொண்டாய்? எனக்கும் இந்த வல்லமை வேண்டும், என்னில்லாத ஒன்று உன்னில் காணப்படுகிறது'' என்பார்கள்.

இராமுழுவதும் பிரயாசப்படுகி றோமா? வலது பக்கத்திலே வலையை வீசுவோம். தேவன் நமது பாவங்களை நீக்கி பரத்திலிருந்து வரும் வல்லமையால் நிரப்பும்படி கேட்போம். பொறுமை யற்றவர்களும், சுயநலமுள்ளவர்களும், பேராசையுடையவர்களுமாய் நாமிருந் தால் இந்த வல்லமையைப் பெற முடியாது. இப்படிப்பட்டவர்கள், சுயம், பெருமை, லௌகீக எண்ணங்கள் ஆகிய வற்றை விட்டுவிட வேண்டும். நமது சுயத்துக்காக அல்ல, தேவ நாம மகிமைக் காக இதைச் செய்யும்போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். முழுமையான தும் வழிந்தோடுவதுமான ஆசீர்வாதங் களைப் பெறுவோம்.

பரலோகத்தின் அளவு எவ்வளவு என்று அறிவீர்களா? 'அமுக்கிக் குலுக்கி, சரிந்து விழும்படி நன்றாய் அளந்து மடியிலே போடப்படும் அளவு' லூக்கா *6:38*. வேதவசனத்தால் நமது இருதயங்கள் நிரப்பப்பட்டிருக்குமானால் சாத்தான் உள்ளே எப்படி நுழைய முடியும்? உலகமும் உட்பிரவேசிக்க முடியாது. பரலோகத்தின் அளவு வழிந்தோடும் முழுமையான அளவு. இந்த நிறைவு உங்களில் காணப்படுகிறதா? இல்லை யென்றால் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். நன்மையானவைகளை நமக்குத் தருவது பிதாவின் விருப்பமா யிருக்கிறது லூக்.*12:32*.

நாம் இவ்வுலகில் பிரகாசிக்க வேண்டும் என்பது தேவனது விருப்பம். அவருடைய பணிக்காகத் தூக்கி நம்மை நிறுத்த அவர் வாஞ்சிக்கிறார். அவரு டைய குமாரனுக்கு நாம் சாட்சியா யிருக்க வல்லமையை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். நாம் விற்கவும் கொள்ளவும் லாபம் ஈட்டவும் இவ்வுலகில் வைக்கப்படவில்லை. நாம் கிறிஸ்துவை மகிமைப்படுத்த வேண்டும். ஆவியின் நிறைவின்றி இதனைச் செய்ய முடியாது.

அப்.*1:8*ல் "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும் சாட்சிகளா யிருப்பீர்கள்'' என்று கிறிஸ்து கூறியிருக் கிறார். கிறிஸ்து மகிமைப்படுத்தப்பட்ட பத்து நாட்களுக்குப் பின்பு பெந்தே கொஸ்தே நாளிலே தூய ஆவியானவர் வல்லமையாகப் பொழிந்தருளப் பட்டார்.

### ஆவியின் புதிய பொழிவு

அப்.*4:31*ல் தூய ஆவியானவர் இரண்டாம் முறையாக அவர்கள் கூடிய இடத்தில் பொழியப்பட்டது என்றும் அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது என்றும் அவர்களெல்லாரும் இந்த வல்லமையால் நிரப்பப்பட்டார்கள் என்றும் படிக்கிறோம். நாம் ஒழுகிப் போகிற பாத்திரங்களாயிருப்பதால், நீரூற்றின் அடியில் எப்போதுமிருந்து புதிது புதிதாக ஆவியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பத்து ஆண்டு களுக்கு முன்பாக நாம் பெற்ற கிருபையை பயன்படுத்தி தேவ பணியை நாம் செய்வது தவறு. புதிய பொழிவு, புதிய அபிஷேகம், மற்றும் புதிய

வல்லமை நமக்குத்தேவை. நாம் முழு மனதோடு தேடினால் மட்டும் பெற்றுக் கொள்ள முடியும்.

முற்காலத்தில் மனந்திரும்பியவர்கள் இந்த வல்லமையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென போதிக்கப் பட்டது. பிலிப்பு சமாரியாவுக்குச் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான். இங்கு அதிக பணி நடைபெற்று அநேகர் மனந்திரும்பிய செய்தி எருசலேமை எட்டியது. பேதுருவும், யோவானும் அங்கு சென்று தங்கள் கரங்களை அவர்கள் மீது வைத்தபோது அவர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார்கள். இதையே நாமும் எதிர்பார்க்க வேண்டும். தேவ ராஜ்யம் கட்டப்படவும் தேவ நாமம் மகிமைப்படவும் தேவ ஆவியானவர் இறங்கி மக்களை பயன்படுத்த வேண்டும். அப்.19:1ல் பவுல் சில சீஷரைக் கண்டு, "நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?'' என்று கேட்டபோது, "அவர்கள்: பரிசுத்த ஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப் படவே இல்லை என்றார்கள்'' (அப்.19:2) இன்றும் இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் இருக்கவே செய்கிறார்கள்.

சபை இந்த அறிவை மறந்து விட்டது. எனவேதான் கிறிஸ்தவர்கள் வல்லமையற்றிருக்கின்றனர். நூறு மக்களை சபையில் சேர்த்து விடுவதால் சபையில் வல்லமை அதிகரிப்பதில்லை. ஆனால் அவர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டவர்களாயிருந்தால் சபை வலிமை பெறும்.

### தாகமுள்ளவர்கள்மேல் தண்ணீர் ஊற்றப்படுதல்

இன்று சபையிலிருக்கும் அநேகர் பாலைவனம் போல வரட்சியுற்று உயிரற்று காணப்படுகின்றனர். ஆவியால் நிரப்பப்பட்ட ஒருவன் நதியோரத்தில் நடப்பட்ட மரம் போல செழிப்பாகவும் கனி கொடுக்கிறவனாகவுமிருப்பான். அதற்குக் காரணம் அவனது வாஞ்சையே. ஆவியின் அபிஷேகத்தை அவன் வாஞ்சித்து அதைப் பெற்றுக் கொள்கிறான். இந்த அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள நாம் வாஞ்சிக்கிறோமா?

நான் முதல் முதலாக ஆங்கிலேய தேசத்தில் பேசியபோது அநேக ஊழியக்காரர்கள் அங்கு கூடியிருந்தனர். ஆங்கிலேயரின் வேத போதனைகள் எனக்குத் தெரியாது. குறிப்பாக பரிசுத்த ஆவியானவரின் வரத்தைக் குறித்துப் பேச நான் தயங்கினேன். ஒரு ஊழியக்காரர் தலை குனிந்தே உட்கார்ந்து நான் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்தார். நான் பேசியதை அவர் விரும்பவில்லை என்று எண்ணினேன்.

பல நாட்களுக்குப் பிறகு ஒரு பகல் கூடுகையில் இதே ஊழியக்காரர் மிகுந்த மகிழ்ச்சியோடு எழுந்து நின்றார். நான் முன்பு கேட்ட சத்தியம் சுவிசேஷத்தை அறிவிக்கப் புது வல்லமையை கொடுத்ததாகக் கூறினார். வீட்டிற்குச் சென்று தேவனை நோக்கிப் போராடி ஜெபித்ததாகவும், தாம் வெறுமையாக்கப் பட்டு தூய ஆவியால் நிரப்பப்பட ஜெபித்ததாகவும், தேவன் அவருடைய ஜெபத்தைக் கேட்டு ஆவியின் புது வல்லமையால் அவரை நிரப்பினார் என்றும் சாட்சி கூறினார்.

அவருடைய ஊழியம் ஆசீர்வதிக்கப்பட்டது. மக்கள் தினம்தோறும் சபையில் சேர்க்கப்பட்டனர். பல்வேறு சபைகளிலிருந்து அவருக்கு அழைப்புகள் வந்தன. அவருடைய ஆலயமும் மக்களால் நிரம்பி வழிந்தது. அவர் புதிய ஜலத்தால் நிரப்பப்பட்டபடியால் பல இடங்களிலிருந்து மக்கள் அவரைத் தேடி வந்தனர். நீரூற்றைவிட உயரமான இடத்தில் நீரோடை செல்வதில்லை. விசேஷித்த வல்லமையை நீரூற்றிலிருந்து நாம் பெறவேண்டும்.

இன்னொரு ஊழியக்காரரை நான் அறிவேன். அவர் ஒரு இருதய நோயாளி. அவர் ஒரு வாரத்தில் ஒருநாள் மட்டுமே பிரசங்கிப்பார். மற்ற நாட்களில் இன்னொருவர் உதவி செய்வார். அவர் ஆவியின் அபிஷேகத்தைக் குறித்து கேள்விப்பட்டபோது நான் மரிக்குமுன் இந்த அனுபவம் எனக்கு வேண்டும். இன்னொரு முறை நான் பிரசங்கிக்கச் செல்லுமுன் நான் ஆவியால் நிரப்பப்பட வேண்டும் என்று வாஞ்சித்து ஜெபித்தார்.

அதன்பின்பு அவர் ஒரு வாரத்தில் எட்டு முறை பிரசங்கித்தார். அனேகர் மனந்திரும்பினார்கள். ஏனெனில் ஆவியானவர் அவர் மேல் இறங்கினார். கடின உழைப்பு அல்ல, ஆவியில் வல்லமையோடு உழைப்பதுதான் ஊழியர்களுக்கு வெற்றியைத் தரும்.

பெந்தெகொஸ்தே நாளில் ஊழியமும், ஊழியக்காரரும் ஆசீர்வதிக்கப்பட்டனர். போதகர்களுக்கு மட்டுமே இது அவசியம் என்று எண்ண வேண்டாம். ஒவ்வொரு தாய்மாருக்கும், ஓய்வுநாட்பாடசாலை ஆசிரியருக்கும் ஆவியின் நிறைவு அவசியம். இதைப் பெற்றுக்கொள்ளும் வரை நாம் இளைப்பாற வேண்டாம். இதையே நாம் முதன்மையாகக் கொண்டு, இரவும் பகலும் "தேவனே, பரத்தின் வல்லமையால் நான் நிரப்பப்படும் வரை நான் இளைப்பாறுவதில்லை'' என்று ஜெபித்தால் தேவன் நம்மையும் வல்லமையால் நிரப்புவார்.

# கர்த்தாவே இறங்கி வாரும், நாங்கள் உம்மைக் கெஞ்சி வேண்டிக்கொள்கிறோம்

**We beseech you - come down, Lord!**

Roger Ellsworth

வேதபகுதி : ஏசாயா 64:19

இன்று அநேகக் கிறிஸ்தவர்கள் ஜெபத்தை விட்டுவிட்டார்கள் என்று தோன்றுகிறது. அவர்கள் தேவனைக் குறித்து அவர் கரிசனையற்றவரென்றும், சிக்கனமானவர் என்றும் எண்ணி அவர் தங்கள் விண்ணப்பங்களைக் கேட்பதில்லை என்றும் அல்லது அவர் அதற்கு முதலிடம் கொடுப்பதில்லை என்றும் தவறான எண்ணமுடையவர்களாயிருக்கிறார்கள்.

ஆனால் வேத வசனத்தின்படி பிரச்சனை நம்மிடமே உள்ளது. அவர் நம்மை ஆசீர்வதிக்க எப்போதும் ஆவலுடையவராயிருக்கிறாரென்று வேத வசனம் காட்டுகிறது. தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய்த் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார். அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு அவர்களை இரட்சிக்கிறார். சங்.146:18,19

நம்மிடமுள்ள குறை என்ன? தேவன் சமீபமாய் வர சங்கீதக்காரன் கூறும் நிபந்தனை என்ன? உண்மையாய் அவரை நோக்கிக் கூப்பிட வேண்டும். ஆனால் நாம் வெதுவெதுப்பான ஜெபங்களை ஏறெடுத்துவிட்டு தேவன் நம்மிடம் வந்து உதவி செய்யவில்லை என்று குறைகூறுகிறோம்.

அவர் ஜெபத்தைக் கேட்கிறவராக இருந்தாலும், நாம் ஜெபம் என்று சொல்வதையெல்லாம் அவர் ஜெபமாக எடுத்துக் கொள்வதில்லை. நாம் ஜெபிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஏசாயாவின் ஜெபத்தின்படி 'நாங்கள் உம்மை வருந்திக் கேட்கிறோம்', என்கிறார். ஜெபத்தில் காணப்பட வேண்டியவைகள் எவை?

### 1. ஆழமான ஆவல்

கெஞ்சி வேண்டிக்கொள்கிறோம் என்பது, ('Beseech') ஒரு உறுதியான வார்த்தை. கேட்கிறது, வேண்டுவது என்பவை மெல்லியவை. ஆனால் இது ஆவலும் வாஞ்சையும் நிறைந்தது. இது விடாப்பிடியாக கெஞ்சி, வாதாடி கேட்பதைக் குறிக்கிறது.

ஏசாயா ஏற்கெனவே ஜெபத்தைக் குறித்துக் கூறியிருக்கிறார். ஒருவர் தன்னை உற்சாகப்படுத்தி தேவனைப் பற்றிக் கொள்ளவேண்டும். தேவனிடம் என்னை ஆசீர்வதியும் என்று கேட்பது மட்டுமல்ல, அவரை விடாமல் பற்றிப் பிடித்துக் கொள்வதாகும். தேவன் மேல் ஆழமான வாஞ்சையில்லாமல் அவரைப் பற்றிக் கொள்வது கூடாத காரியம்.

அன்னாள் (1 சாமு.1:9-18), நெகேமியா (நெகே.1:4-11), மோசே(யாத்.33:12-23), ஆகியோரின் ஜெபங்களைப் படித்துப் பாருங்கள்.

சங்கீதக்காரன் தேவன் மேலுள்ள தனது வாஞ்சையை வெளிப்படுத்துகிறதை சங்.42:1-2 வசனங்கள் கூறுகின்றன. "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக்

கதறுகிறது. என் ஆத்துமா தேவன் மேல், ஜீவனுள்ளதேவன் மேலேயே தாக மாயிருக்கிறது" பின்பு சங்.84:2ல் "என் இருதயமும், மாம்சமும், ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்த மிடுகிறது" என்கிறார்.

ஜெபம் ஏன் கேட்கப்பட வில்லை என்பதை இவ்வாறு நாம் அறிந்து கொள்ளலாம். இந்த அளவான வாஞ்சை நம்மிடம் காணப்படுகிறதா? எழுப்புதல் குறித்து பேசுகிறோம். ஏசாயா அதற்காக ஜெபித்தான். ஆயினும் தேவமக்கள் மத்தியில் ஒரு உத்தம எழுப்புதல் ஏன் வரவில்லை? உண்மையாக நாம் ஒரு எழுப்புதலை வாஞ்சிக்கவில்லை.

எழுப்புதலைப் பெற்றுக் கொள்வது எப்படி? தேவன் பெரிய காரியங்களைச் செய்ய நாம் விரும்பு கிறோம். ஆனால் ஆழமான கரிசனை யோடு அதைத் தேடவில்லை. நாம் வாழும் நடைமுறையை நாம் மாற்ற விரும்பவில்லை.

எங்கிருந்து ஆழமான வாஞ்சை வரும்? நாம் சுற்றிலும் பார்த்து நமது தேவைகளை கவனிக்க வேண்டும். இதுதான் ஏசாயாவில் வாஞ்சையை ஏற்படுத்தியது. அவன் தனது தேசத்தைப் பார்த்து அது என்ன செய்து கொண்டிருந்தது, அது எதை எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறது என கவனித்தபோது அவனுடைய இருதயம் அசைந்தது. தேவ ஜனங்கள் விழிப் படையுமுன் எத்தனை தீமைகள் தேசத்தில் நடந்து கொண்டிருக்கின்றன! குடும்பங்கள் சீரழிக்கப்படுகின்றன. கிறிஸ்தவம் நிந்திக்கப்படுகிறது! நமக்கு எப்போது பாரம் ஏற்படப்போகிறது? பேர்க்கிறிஸ்தவ சபையை இன்று நாம் பார்த்து அதிர்ச்சியும், வெட்கமும் அதிகரிக்க வேண்டும். நாமும் கூட சுற்றிலும் வாழுகிற மக்களைப் போல காணப்படுகிறோம். "உன்னுடைய கிரியைகளை நான் அறிந்திருக்கிறேன்" என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளை நினைவுபடுத்துவோம். அவருடைய கிருபையை அசட்டை பண்ணினால் நியாயத்தீர்ப்போடு நம்மிடம் வருவார். நாம் இவ்வுலகின் பாவ வழிகளை ஆதரித்தால் சமூகத்தைப் பற்றிய பாரம் ஒருபோதும் ஏற்படுவதில்லை.

## 2. தாழ்மையுள்ள இருதயம்

ஏசாயா கெஞ்சி வேண்டுகிறான். அவன் தனக்குத் தானே உதவி செய்ய முடியாதவன், வல்லமையற்றவன். அவன் ஒருவர் மீது சார்ந்திருக்க வேண்டும். தேவனை நோக்கிக் கெஞ்சிக் கேட்பதற்குத் தாழ்மை அவசியம்.

ஏசாயாவின் ஜெபம் முழுவ திலும் தாழ்மை இழைந்து காணப் படுகிறது. ஏசாயா 63:15ல் தேவன் பரத்திலிருப்பதையும் அவர் கீழே நோக்கிப் பார்க்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது. இது ஏசாயா தேவனு டைய மகத்துவத்தையும் மனிதனுடைய தகுதியற்ற நிலையையும் உணர்ந்ததைக் காண்பிக்கிறது. அவர்களுடைய பாவங் களின் அழுக்கைக் குறிப்பிடும்போது (ஏசா.64:5-7) ஏசாயா தன்னையும் மக்களையும் தேவனுக்கு முன்பாக அழுக்கான கந்தைகளாகத் தாழ்த்து கிறார்.

உண்மையான ஜெபம் தாழ்மை யுடன் ஏறெடுக்கப்படுகிறது. "சிறுமைப் பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவார்" சங்.9:12. "கர்த்தர் உயர்ந்தவரா யிருந்தும் தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்" சங்.138:6.

தாழ்மை அவசியம் என்பது எப்போதும் நினைவிலிருக்க வேண்டும். 2 நாளா.7:14 நன்கு அறியப்பட்ட வசனம். "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி...."

ஆவிக்குரிய தன்மையோடு வன்முறை காணப்படுவது கவலைக்கிட மாயிருக்கிறது. அது தேவனோடு மிக நெருக்கத்தைக் காண்பிப்பதாக எண்ணப் படுகிறது. சிலர் 'தேவன் என் வாழ்வில் இதைச் செய்கிறார்' என்று கூறும்போது 'என் வாழ்வு' என்பதுதான் 'தேவன்' என்பதை விட வன்மையாக ஒலிப்பதை விரும்புகிறார்கள். 'என்னுடைய அமைதியான வாழ்வுக்கு நன்றி' என்று கூறினால் போதுமே. அவருடைய வசனத்திற்கு நன்றி சொல்லலாமே. நம்மை ஏன் பிரசித்தப்படுத்த வேண்டும்? நம்மைப் பற்றியே கூறுவது பரிசேயனின் ஜெபத்தைப் போன்றது. இதற்கு அடிப்படைக் காரணம் தாழ்மை யில்லாய்மையே.

பெருமைக்கு ஒரே நிவாரணம் தேவனுடைய தூய்மை, மகத்துவம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். "ஐயோ நான் அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ளவன்; அசுத்த உதடுகளுள்ள மக்கள் மத்தியில் வாசம் பண்ணுகிறவன், சேனைகளின் கர்த்த ராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே" என்று ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தில் உயர்ந் திருப்பதைக் கண்ட ஏசாயா கதறினான் ஏசா.6:1-5.

## 3. நோக்கத்தில் உறுதி

தேவன் நமது ஜெபத்திற்குப் பதில் அளிக்க நாம் உண்மையாக வாஞ்சித்தால் ஜெபத்தை எளிதில் விட்டு விடமாட்டோம். விடாப்பிடியாக ஜெபிக்கும் ஜெபமே உண்மையான ஜெபம்.

சோர்ந்து போகாமல் எப்பொழு தும் ஜெபிக்க வேண்டு மென்பதை இயேசு ஒன்றிற்கு மேற்பட்ட இடங் களில் வற்புறுத்தியிருக்கிறார். லூக்.18ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட விதவை ஒரு நியாயாதிபதியை நாள்தோறும் தொந்தரவு செய்தது குறிப்பிடப் பட்டுள்ளது. அவளுடைய எதிரியிட மிருந்த வியாச்சியத்தில் அவளுக்கு நியாயம் கிடைக்க அந்த நியாயாதி பதியிடம் செல்லுகிறாள். அவனோ மக்களுடைய நலனைக் குறித்த அக்கரை அற்றவன். ஆயினும் இந்த விதவையோ அவனிடம் சென்று தனக்கு எதிரியிட மிருந்து நியாயம் கிடைக்க வேண்டு மென்று மறுபடியும் மறுபடியும் கேட்கிறாள். முதலில் அவன் மறுத்தாலும் அந்த விதவை தொடர்ந்து அவனிடம் சென்று அவனைத் தொந்தரவு செய்தாள். ஒவ்வொரு நாளும் அவனுடைய வீட்டிற்கும், அலுவலகத்திற்கும் அவள் பின்தொடர்ந்திருக்கலாம். அவன் திரும்பும்போதெல்லாம் அவள் நின்று கொண்டிருந்தாள். இறுதியில் அவளது தொந்தரவு நீங்க அவளுக்கு பதில் செய்தான் லூக்.18:1-8.

தேவன் அந்த அநீதியுள்ள நியாயாதிபதி போன்றவரல்ல. அவர் தமது ஜனங்களின் தேவைகளைக் குறித்து அக்கரையுடையவர். அநீதியுள்ள ஒரு நியாயாதிபதி விடாப்பிடியாயிருந்த ஒரு பெண்ணுக்கு நியாயம் செய்தால் நாம் விடாப்பிடியாக ஜெபித்தால் தேவன் பதிலளிப்பது எவ்வளவு நிச்சயம்!

ஏன் இவ்வாறு விடாப்பிடியாக இருக்கவேண்டும் என்று சிலர் கேட் கலாம். நமக்குத் தேவையானதை ஏன் அவர் தரக்கூடாது? நாம் கேட்பது அவருக்காக அல்ல, நமக்காக என்ற எண்ணம் நமக்கு வேண்டும். எளிதில் கிடைக்கும் ஆதாயங்கள் மதிக்கப்படுவ தில்லை. ஆனால் கடின உழைப்பால் பெறப்பட்டவை பத்திரமாக பாது காக்கப்படும். எளிதில் கிடைப்பவை கவலையீனமாக செலவழிக்கப்படும்.

சோர்ந்து போகாமலும் இடை விடாமலும் ஜெபிப்பது தேவன் அளிக்கும் ஆசீர்வாதங்களை மதிப்பதா யிருக்கும். அவ்வாறு மதிக்கிற மக்களுக்கு அதிகமான ஆசீர்வாதங்களை அளிப் பதில் தேவன் கருத்தாயிருக்கிறார். ஏசா.62:1, 6-7 வசனங்களில் ஏசாயா தேவன் தன்னையும் தன் ஜனங்களையும் மறுமலர்ச்சி அடையச் செய்யும்வரை தான் இளைப்பாறுவதில்லை என்கிறார். தேவன் இல்லாமல் நாம் வாழ முடியாது என்று நாம் தீர்மானித்தால் ஜெபத்தில் ஏசாயாவைப் போல உறுதியாயிருப் போம்.

எனவே பதிலளிக்கப்படாத ஜெபங்களுக்காக தேவனை குறை சொல்ல வேண்டாம். நம்மை நாமே சோதித்துப் பார்ப்போம். எத்தனை பேர் நாம் அரைகுறை மனதோடும், சுயநலத் தோடும், நிர்விசாரத்தோடும் ஜெபிக்கி றோம்? தேவ வல்லமையின்றி ஜெபிப் பதை விட்டுவிட்டு வாஞ்சையோடும், தாழ்மையோடும், உறுதியோடும் ஜெபிப் போம்.

**இன்று அநேகக் கிறிஸ்தவர்கள் ஜெபத்தை விட்டுவிட்டார்கள் என்று தோன்றுகிறது. அவர்கள் தேவனைக் குறித்து அவர் கரிசனை யற்றவரென்றும், சிக்கனமானவர் என்றும் எண்ணி அவர் தங்கள் விண்ணப்பங்களைக் கேட்பதில்லை என்றும் அல்லது அவர் அதற்கு முதலிடம் கொடுப்பதில்லை என்றும் தவறான எண்ணமுடையவர்களாயிருக்கிறார்கள். ஆனால் வேத வசனத்தின்படி பிரச்சனை நம்மிடமே உள்ளது.அவர் நம்மை ஆசீர்வதிக்க எப்போதும் ஆவலுடையவராயிருக்கிறாரென்று வேத வசனம் காட்டுகிறது.**

# நீங்கள் ஜெபிக்கிற ஜெபங்களுக்கு நீங்களே பதிலாக இருக்க ஆயத்தமா?

**Are you ready to be the answer to the prayers you pray?**

Kim Butts

தேவையிலிருக்கிற ஒருவரையோ, ஒரு குடும்பத்தினரையோ நாம் கண்டு உடனே 'ஆண்டவரே இந்த மனிதனுக்கு (குடும்பத்திற்கு) உதவி செய்யும், உதவிக்காக யாரையேனும் அனுப்பும்' என்று ஜெபிக்க நினைக்கிறோம். இந்த ஜெபத்திற்கு நீங்களும் உங்கள் குடும்பமும் ஏன் பதிலாக இருக்கக்கூடாது? ஆண்டவர் உங்களை வழிநடத்தினால் உங்கள் ஜெபத்திற்கு பதிலாயிருக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா? நொந்துபோனதும் இழந்துபோனதுமான மக்களுக்கு உதவி செய்ய தேவ குமாரனின் கரங்களாகவும் கால்களாகவும் இருக்கக்கற்றுக் கொள்ள பிதா விரும்புகிறார்.

இயேசு நம்மில் வசிப்பதால் நாம் ஜெபிக்கும்போது அவர் இந்தத் தேவையை சந்திக்க சரீரபிரகாரமாக அவர் இருந்திருந்தால் என்ன செய்வார் என்று சிந்திக்க வேண்டும். அவர் இன்றும் ஜீவிக்கிறார். அவர் நம்மில் பிறந்திருப்பதால் எந்த சூழலிலும் அவர் பிரசன்னமாயிருக்கிறார். இந்த எண்ணம் அல்லது உணர்வு நாம் ஜெபிக்கும் ஜெபத்தின் பதிலை எதிர்பார்க்கும் விதத்தில் மாற்றத்தை உண்டு பண்ணுகிறதா? ஜெபித்தபடியால் சரியான காரியத்தை செய்து முடித்துவிட்டோம் என்று எண்ணி அடுத்த செயலுக்குக் கடந்து செல்லலாமா? ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் என்ன பேசுகிறார் என்பதை கவனித்து விட்டு அடுத்த நிலைக்குச் செல்லலாமல்லவா? ஆவியானவரின் ஏவுதலால் மக்களின் வாழ்வு, சூழல் ஆகியவற்றில் இயேசு அறிவிக்கப்பட நமக்கு அளிக்கப்பட்ட தருணங்களை இழந்துவிட்டோம்.

தூய ஆவியானவரின் சத்தத்திற்கு நாம் நன்கு செவி கொடுத்தால் நமது அனேக ஜெபங்கள் விரைவாகவும் ஆச்சரியமாகவும் பதில் செய்யப்படும் என்று நான் நம்புகிறேன். நம்முடைய மனநிலையை ஜெபிக்கும்போது மாற்ற வேண்டும். அப்படியானால் தேவன் நம்மை மாற்றங்களை ஏற்படுத்த வல்லமையாக பயன்படுத்துவார். உங்கள் குடும்பம் தொடர்ந்து கர்த்தருக்குக் காத்திருந்து அவர் நீங்கள் ஜெபிக்கிற ஜெபங்களுக்கு நீங்கள் பதிலளிக்க பயன்படுத்துவார் என்பதை எண்ணிப் பார்த்தால் அது ஆச்சரியமல்லவா?

### ஒரு மிக விசேஷித்த கிறிஸ்து பிறப்பு

எனது ஜெபவாழ்வில் இந்த உண்மை எனது அனுபவமானதை உதாரணமாகக் கூறுகிறேன். நான் புது கிறிஸ்தவனாயிருந்த போது ஆண்டவரைக் குறித்த அனைத்து காரியங்களும் எனக்கு அற்புத அதிசயமாகவே இருந்தது. அந்த நிலை பல ஆண்டுகளாக நீடிக்கிறது. ஒரு சிறு பெண்கள் குழு வேத வசனத்தைப் படித்து இணைந்து ஜெபிக்கக் கற்றுக் கொண்டதை நினைவு கூருகிறேன். ஒரு இளம் பெண்ணுக்கு மூன்று சிறு பையன்களுண்டு. கணவன் குடும்பத்தைப் பராமரிக்க இன்னொரு இடத்தில் பணிசெய்தார். சில மாதங்களுக்கு ஒருமுறை மட்டுமே அவர் வீட்டிற்கு வரமுடியும். வீட்டில் பணம் குறைவாயிருந்தாலும் அவள் எப்பொழுதும் சந்தோஷமாகவே இருப்பாள். தனது கணவன் கிறிஸ்து பிறப்பு பண்டிகையின் போது வீட்டிற்கு வந்து குடும்பத்தோடு கொண்டாட வேண்டுமென்று ஒரு மாலைப் பொழுதில் தனது வீட்டில் ஜெபித்தாள். நாங்கள் அவளோடு சேர்ந்து ஜெபித்தோம்.

நான் ஜெபித்தபோது இந்தக் குடும்பத்திற்காக ஏதேனும் செய்ய வேண்டும் என்ற வலுவான உணர்வு எனக்கு ஏற்பட்டது. நான்சி என்ற சினேகிதியுடன் இதனைப் பகிர்ந்து கொண்டேன். இருவருமாக திட்டம் செய்தோம். முதலாவது அவளுக்குப் பொருளுதவி செய்ய எண்ணி பணத்தை ஒரு உறையிலிட்டு அவளது கார் இருக்கையில் வைத்தோம். யார் வைத்தது என்று அவள் அறியக்கூடாது என்று தீர்மானித்தோம்.

அடுத்த ஜெபக்கூடுகையில் அப்பெண் அந்த வாரத்திற்குரிய செலவுக்குப் போதிய பணமில்லாதிருந்ததாகவும் அவளுக்கு தேவையான சரியான பணத்தை தேவன் ஆச்சரியமாக அளித்தார் எனவும் சாட்சி கூறினாள். தேவன் தங்களை கொடையாளர்களாக மட்டுமல்ல, தேவைக்குச் சரியான அளவிலான பணத்தைக் கொடுக்க உதவி செய்ததற்காக நானும் நான்ஸியும் ஆச்சரியமடைந்தோம். தொடர்ந்து அவளது ஜெபக்குறிப்புக்காக ஜெபித்தோம்.

இந்தப் பெண் தனது கணவர் பண்டிகைக்கு வரமுடியாவிட்டால் அதற்கு முன்பாகத் தான் அவரை சந்திக்க ஒரு வாரஇறுதியில் புறப்பட்டாள். நானும் நான்ஸியும் மாறி மாறி பிள்ளைகளை அந்நாட்களில் கவனித்தோம். மட்டுமின்றி வீட்டை அலங்கரித்து பாடல்களைப் பாடி பிள்ளைகளை சந்தோஷப்படுத்தினோம். அவர்களுடைய தந்தை கிறிஸ்துபிறப்பு பண்டிகையில் அவர்களோடிருக்கப் பிள்ளைகளுடன் சேர்ந்து ஜெபித்தோம். என்ன ஆச்சரியம். அப்பாவும் அம்மாவுமாக வந்து சேர்ந்துவிட்டனர். அவர்கள் அனைவரும் இணைந்து ஒரு விசேஷித்த பண்டிகையை ஆசரித்தனர். நான் ஆவியானவரின் குரலுக்குக் கீழ்ப்படிவது அவசியம் என்று உறுதிகொண்டேன். எனவே கீழ்ப்படிதலின் ஒவ்வொரு செயலும் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்துகிறவைகளாயிருந்தன.

### ஜெபத்தின் மூலம் தேவன் கிரியை செய்கிறார்

"மக்களுக்கு உதவி செய்யு முன்னால் நாம் ஜெபிக்க வேண்டியதில்லை" என்று சிலர் சொல்லலாம். ஆனால் நமது அவசரத்தில் தேவன் நமது பாதையில் வைத்திருக்கும் வாய்ப்புகளைத் தவற விடக்கூடாதே. "ஆண்டவரே, இன்று நான் உதவி செய்ய வேண்டிய மக்களைக் காண்பியும். தேவையிலிருப்போரிடம் எங்களை வழிநடத்தும். அதற்கான உதவிகளைச் செய்ய உம்மை நம்பியிருக்கிறோம்" என்று ஒரு ஜெபத்தை ஏறெடுப்போம். நீங்கள் கவனித்துக் கீழ்ப்படிந்தால் அன்புள்ள பிதா நிச்சயம் பதிலளிப்பார். முதலில் சிறுகாரியங்களில் உங்களுக்கு நம்பிக்கை கொடுத்து பின்பு அவரது பெரிய திட்டங்களில் கீழ்ப்படியச் செய்து ஆசீர்வதிப்பார்.

பிறருடைய ஜெபத்திற்கு நாம் பதிலாக அமைவது நாம் தேவனால் பயன்படுத்தப்படும் ஒருவிதம். நமது சொந்த ஜெபங்களுக்கு நாம் பதிலாயிருப்பது பிரமிப்பை ஏற்படுத்தும் வல்லமையான வாய்ப்பு. நீங்கள் அறிந்திருக்கிற மக்களுடைய வாழ்வியுள்ள ஒரு சூழ்நிலையாயிருக்கலாம், அல்லது நீங்கள் சந்தித்திராத மக்களுடைய வாழ்வில் கிரியை செய்ய நீங்கள் ஜெபிக்க தேவன் உங்களை பயன்படுத்தலாம். ஜெபம் ஒரு பெரிய இரகசியம். தேவன் நம்மை பதிலளிக்கும் ஜெபங்களுக்குக் காரணிகளாக பயன்படுத்த விரும்புகிறார். இதை அறிவதால் ஜெபம் கனமுடையதாகிறது. அது நாம் ஜெபிக்க அதிகமாக உற்சாகப்படுத்தப்படவும், அதிகமாக கவனிக்கவும் ஏதுவாகிறது. திறப்பின் வாயில் நிற்க ஆண்டவர் ஒரு பாரம் அல்லது தேவையை நமது இருதயத்தில் தரும்போது நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும். அவர் சில வேளைகளில் உங்களை பயன்படுத்தாமலிருக்கலாம்; ஆனால் உங்கள் ஜெபத்தின் மூலம் கிரியை செய்ய வேறு ஒருவருடைய உள்ளத்தைத் தொடலாம். நீங்கள் தூரத்திலிருக்கும் ஒருவருக்காக ஜெபிக்க விரும்பினால், ஆண்டவரே, உமக்கு சித்தமான ஒரு ஊழியக்காரனை இந்த நபருக்கு ஆசீர்வாதமாயிருக்க வழிநடத்தும் என்று ஜெபிக்கலாம். தேவனுடைய குடும்பம் பெரியது. அது உலகமெங்கும் பரவியுள்ளது. அவர் அவரது சத்தத்திற்குக் செவி கொடுக்கிற எவரையும் பயன்படுத்துவார்.

### வேத வசனத்திலிருந்து ஒரு எடுத்துக்காட்டு.

தேவனோடு ஜெபத்தின்மூலம் நெருங்கிய தொடர்பு கொண்டவன் நெகேமியா. அவன் ஜெபித்த ஜெபங்களுக்கு அவன் பதிலாக பயன்படுத்தப்பட்டான். தன்னைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை அவன் உற்று கவனித்தான். தேவனுடைய இருதய வாஞ்சையின் படி ஜெபிக்கவும் அவன் அறிந்திருந்தான். அவன் தாழ்மை

(8-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

## கோவை சிற்றி ஏ.ஜி. சபை

**17.02.2018**

தேவனுடைய சுத்த கிருபையினால் 16ம் தியதி மாலை சுமார் 3.30 மணிக்கு நாகர்கோவிலிலிருந்து வழக்கம் போல் ஒரு வாகனத்தில் ஜெபத்துடன் புறப்பட்டு, இரவு 10.30 மணிக்கு கோயம்புத்தூர் போய் சேர்ந்தோம். இரவு இளைப்பாறிவிட்டு சபைக்கு போய் சேர்ந்தோம். உண்மையாகவே தேவன் உபவாச ஜெபத்தை அதிகமாய் ஆசீர்வதித்தார். பாடல், ஆராதனை, தரிசனசெய்தி, தேசத்திற்காக ஜெபம், தேசத்திற்கான தரிசனம், இறுதிசெய்தி, ஜெபம் எல்லாவற்றையும் நேர்த்தியாய் நடத்த அன்பின் ஆண்டவர் இரக்கம் பாராட்டினார். வந்திருந்த ஜனங்கள் தேவனால் அதிகமாய் தொடப்பட்டார்கள். தேவன் அவர்களை ஆசீர்வதிப்பாராக.

உபவாச ஜெபத்தை மிகவும் நேர்த்தியாய் ஒழுங்கு செய்திருந்த சபையின் போதகர் J. ஜேம்ஸ் வில்லிங்ஸ்டன் குடும்பத்தினருக்காக தேவனை நன்றியோடு துதிக்கிறோம். தேவன் அவர்களையும் ஊழியத்தையும் கிருபையாய் அதிகமாய் ஆசீர்வதிப்பாராக.

மூன்று அருமையான சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரர் மாத்திரம் வருகையின் தூதன் சார்பாக வந்திருந்தார்கள். அவர்கள் உபவாச ஜெபத்தில் கலந்துகொண்டதும், நேரில் பார்த்ததும், அவர்களுக்காக ஜெபித்ததும் ஆண்டவருக்கு அதிக மகிமையாயிருந்தது. உங்களில் அநேகர் ஏனோ நமது உபவாச ஜெபங்களை அர்ப்பமாய் எண்ணுகிறீர்கள். தயவு செய்து வரும் நாட்களில் உங்கள் மாவட்டத்தில் நடைபெறும் உபவாச ஜெபத்தில் திரளாய் கலந்து கொள்ளு மாறு அன்பாய் கேட்கிறேன்.

உபவாச ஜெபம் முடிந்த பிற்பாடு 6.30 மணிக்கு கோவையிலிருந்து புறப்பட்டு அதே வாகனத்தில் நள்ளிரவு 2.30 மணிக்கு நாகர்கோவில் வந்து சேர தேவன் இரக்கம் பாராட்டினார். மிகுந்த ஜெபத்தோடும், பிரயாசங்களோடும், தேவனுடைய தெளிவான வழிகாட்டுதலின்படி நாம் நடத்துகிற இந்த உபவாச ஜெபங்களை தேவன் கிருபையால் ஆசீர்வதிக்கும்படி அதிக பாரத்தோடு ஜெபிக்குமாறு அதிக அன்பாய் கேட்கிறேன்.

## வருகையின் தூதன் வரலாறு

கர்த்தருடைய கிருபையினால் 1955-ம் ஆண்டு முதல் வருகையின் தூதன் (தமிழ்) பத்திரிகையை எனது தகப்பனார் நடத்தி வருவதை வாசகராகிய நீங்கள் அறிவீர்கள். அதை விவரிக்க கீழே ஒரு கடிதத்தை அச்சிடுகிறேன்:

Praise the Lord

Chennai
22.01.2018

கர்த்தருக்குள் மிகவும் பிரியமான சகோதரர் வெஸ்லி அவர்களுக்கு, என் அன்பான வணக்கம்.

கர்த்தரால் மீட்டுக் கொள்ளப்பட்ட விசுவாசியான தாயார் எழுதுவது, கர்த்தரின் கிருபையால் நானும் (81) என் கணவர் (82) அவர்களும், பிள்ளைகள் குடும்பமும் இம்மட்டும் நலமுடன் இருக்கிறோம். இம்மட்டும் கர்த்தர் எங்களைத் தாங்கி, ஏந்தி, சுமந்து, தப்புவித்துக் காத்து இப்புதிய ஆண்டையும் காணச்செய்த தேவனை நன்றியுடன் துதிக்கிறேன்.

எங்கள் அப்பாவும் (சாயர்புரம்) உங்கள் அப்பா பாஸ்டர் **S.தேவதாசன்** அவர்களும் அந்தக்காலத்தில் ஆவிக்குரிய நண்பர்கள். இப்போது இருவரும் கர்த்தரிடம் போய்விட்டார்கள். 1955-ல் வருகையின் பத்திரிகை தொடங்கிய காலமுதல் எங்கள் அப்பா வருகையின் தூதன் பத்திரிகை வரவழைப்பார்கள். அப்போதிருந்தே, நாங்கள் ஸ்கூலில் படிக்கும் காலத்திலேயே பத்திரிகை படிப்போம். அப்பா சிறுவயதிலிருந்து எங்களைக் கண்டிப்புடனும் தேவ பக்தியின் வழியிலும் நடத்தினார்கள். நான் சென்னையில் ஆசிரியர் ஆக இருக்கும் போதும், திருமணம் ஆன பின் கேரளாவில் எஸ்டேட்டில் வசிக்கும் போதும், இப்போது மகனுடன் சென்னையில் வசிக்கும் வரையும் பத்திரிகை வரவழைத்துப் படிக்கிறேன். எஸ்டேட்டில் வசிக்கும்போது என் ஆவிக்குரிய ஜீவியத்தைக் கட்டி எழுப்பவும், ஆழமான சத்தியங்களை அறிந்து கொள்ளவும் இப்பத்திரிகை ரொம்ப பிரயோஜனமாயிருந்தது, கர்த்தருக்கு ஸ்தோத்திரம். 2017 முழுவதும் ஒழுங்காக பத்திரிகை வந்தது, ஸ்தோத்திரம். தொடர்ந்து 2018லும் அனுப்பும்படி அன்பாய் கேட்டுக்கொள்கிறேன். இப்போது மகனுடன் இருப்பதால் அவன் பெயரிலேயே பத்திரிகை (CN 02660L) வந்துகொண்டிருக்கிறது. மகள் குடும்பமும் சென்னையிலேயே Matriculation School வைத்து நடத்துகிறார்கள். மகன் குடும்பத்துக்காகவும், மகள் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

வயதினிமித்தம் சில நாட்களாக பெலவீனமாக இருக்கிறது. ஜெபித்துக் கொள்ளுங்கள். வருகையின் தூதன் ஊழியத்திற்காக ரூபாய் 5000 உங்கள் வங்கி மூலம் அனுப்பியிருக்கிறேன். **இதயக்கததல் 2018 உபவாச நாட்களில் இங்கிருந்து ஜெபிக்கிறேன்.** நானும், குடும்பங்களும், பிள்ளைகளும் கர்த்தரின் வருகையில் காணப்பட ஜெபித்துக் கொள்ளுங்கள். Praise the Lord!

சகோதரி P.J.

❑◆❑◆❑

எனது தகப்பனார் காலஞ்சென்ற பாஸ்டர் **S.தேவதாசன்** அவர்கள் வருகையின் தூதன் பத்திரிகையை நடத்தின ஆரம்ப நாட்களில், தபால் சலுகையை தபால் துறையிடமிருந்து பெற்றார்கள். பின் **இலவச பத்திரிகைக்கு தபால் சலுகை கிடையாது** என்று சலுகை நிறுத்தப்பட்டது. எனவே பத்திரிகைக்கு வருட சந்தா ரூ.1.00 (ரூபாய் ஒன்று) நிர்ணகிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது.

சுமார் 33,000 பத்திரிகைகள் அச்சிடப்பட்டு ஒரு டெம்போவில் தபால் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருந்த நாட்களில் திரும்பவும் தபால் சலுகை நிறுத்தப்பட்டது. திரும்பவும் போராடி பெறப்பட்டது.

தேவ கிருபையால் 2017-ம் ஆண்டு வரை நமக்கு தபால் சலுகை தந்தார்கள். பல்வேறு காரணங்களால் தபால் சலுகைக்கு நாம் விண்ணப்பிக்கவில்லை. **விண்ணப்பித்த கிறிஸ்தவ பத்திரிகைகளுக்கும் தபால் சலுகை கிடைக்கவில்லை.** எனவே கர்த்தருக்குச் சித்தமானால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைவரை ***வருகையின் தூதன்*** பத்திரிகை அச்சிடப்பட்டு, விரும்புகிற யாவருக்கும் தபால் தலை ஒட்டப்பட்டு அனுப்பப்படும்.

**தபால் சலுகை இல்லாதபடியால் வருகையின் தூதன் பத்திரிகைக்கு சந்தா கிடையாது.**

வருகையின் தூதன் ஊழியங்களை மாதந்தோறும் தங்கள் ஆஸ்திகளால் தாங்கும் (லூக்கா 8:3) 43பேர் பட்டியலை கடந்த மாதம் வெளியிட்டிருந்தோம். அதில் 3 பேர்களைக் குறித்த சாட்சியை கீழே எழுதுகிறேன்:

1. நீலகிரி மாவட்டம் குன்னூரிலிருந்து ஒரு சகோதரர் மாதந்தோறும் இந்த ஊழியத்திற்கு மணியாடர் வழியாக ரூபாய் 20 காணிக்கை அனுப்புகிறார்.

2. தூத்துக்குடியிலிருந்து ஒரு சகோதரர் மாதந்தோறும் இந்த ஊழியத்திற்கு ரூபாய் 50 காணிக்கை அனுப்புகிறார்.

3. சென்னையிலிருந்து ஒரு நண்பர் ஆரம்ப நாட்களில் மாதம் ரூபாய் 250 டிமாண்ட் டிராப்ட் எடுத்து அனுப்பிக் கொண்டிருந்தார்கள். 1992-ம் ஆண்டு அடியேன் உதவி ஆசிரியராக பொறுப்பு ஏற்றது முதல் இவரை எனக்குத் தெரியும்.

இந்த ஆண்டு (2018) ஆரம்பத்தில் நாங்கள் தொலைபேசியில் பேசும்போது அவர், பிரதர் இந்த ஆண்டு நவம்பர் மாதம் நான் ஓய்வு பெறுகிறேன் என்று மகிழ்ச்சியுடன் கூறினார்கள். வங்கியில் வேலை பார்க்கும் இவர் அநேக வருடங்களாக மாதந்தோறும் ரூபாய் 1000 வங்கி வழியாக வருகையின் தூதன் ஊழியங்களுக்காக அனுப்பி வருகிறார்கள் என்பதை தேவனுக்கு மகிமையாக வாசகருக்கு தெரிவிக்கிறேன்.

இயேசப்பா சொன்னதை வாசகருக்கு எழுதி கடிதத்தை முடிக்கிறேன்:

"கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்" லூக்கா 6:38

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
**வெஸ்லி தேவதாசன்**
(WESLEY DEVADASON)

Office :95432 21008
Associate :94897 40295
For Prayer :94980 30295
Editor :04652 03295

**Time:**
10.00 a.m to 1.00 p.m
02.00 p.m to 6.00 p.m
Sunday Holiday

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

யுள்ளவன். இஸ்ரவேல் தேசத்துக்காகச் செய்யும்படி அளிக்கப் பட்டட பணிகளை நிறைவேற்றி அதற்குரிய கனத்தை தேவனுக்குச் செலுத்தினான். தேவன் அவனிடம் ஒப்புவித்தவைகளை நிறை வேற்றுவதில் மிகவும் கீழ்ப்படிதலுடைய வனாயிருந்தான். நெகே.2:12லும் 7:5லும் கர்த்தர் அவன் உள்ளத்தில் வைத்ததைக் குறிப்பிடுகிறார். ஆனாலும் எருசலேமுக் காகச் செய்யும்படி என் தேவன் என் மனதிலே வைத்ததை நான் ஒருவருக்கும் அறிவிக்கவில்லை. அப்பொழுது வம்ச அட்டவணைகளைப் பார்க்கிறதற்கு நான் பிரபுக் களையும், அதிகாரிகளையும், ஜனங்களையும் கூடிவரச்செய்ய என் தேவன் என் மனதிலே ஒரு எண்ணத்தை உண்டாக் கினார்.

### ஆயத்தம்பண்ண சில செயல் முறை வழிகள்

ஆயத்தமாயிருக்கின்ற தமது ஊழியக்காரர்கள் மூலம் தேவன் கிரியை செய்கிறார்.

★ **தேவனுடைய இருதயத்தை அறிந்து ஜெபிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.** வேதவசனத்தைப் படிப்பதும் உங்களைச் சுற்றிலுமுள்ள உலகத்தை கவனிப்பதும் முக்கியமானவை. தேவன் எதில் அதிக முனைப்புடனிருக்கிறார், அவரது ஜனங்களாக நாம் எதைச் செய்ய விரும்புகிறார் என்று பார்க்க வேண்டும். அவருடைய இருதயத்திற்கு நெருக்க மான காரியங்களுக்காக நாம் ஜெபிக்கும் போது பதிலளிக்க அவர் ஆவலாயிருக் கிறார். அவரை முழு இருதயத்தோடு நேசிக்கவும், நம்மைப்போல பிறரையும் நேசிக்கவும் அவர் விரும்புகிறார். நாம் இழந்துபோன மக்களுக்காகவும் அவரது ஜனங்கள் எழுப்புதலடைவதற்காகவும் எதிர்பார்க்கிறார். கிறிஸ்துவின் சரீரத்தில் ஐக்கியம் வேண்டும். இவ்வாறு ஜெபிக்க அநேகரைக் கூட்டி சேர்க்கலாம்.

★ **உங்கள் ஜெபத்திற்கு நீங்கள் பதிலாயிருக்க தாழ்மையோடு எதிர்பார்த்து விருப்பமுடனிருங்கள்.** தேவன் பதிலளிக்க உங்கள் இருதயம் எதிர்பாராவிடில் ஜெபிப்பதில் அர்த்தமில்லை. "ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப் படாமல் விசுவாசத்தோடே கேட்கக் கடவன். சந்தேகப்படுகிறவன் காற்றி னால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப் பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினை யாதிருப்பானாக" யாக்.1:6-7. இயேசு வின் நாமத்தில் நீங்கள் ஜெபித்து, அவர் அதைக் கேட்டார் என்றும் நிச்சயமாக காரியங்களைச் செய்வார் - அதை உங்களிலும் உங்கள் மூலமாகவும் செய்வார். பதிலளிக்கப்பட்ட ஜெபம் கர்த்தருக்கு மகிமையைக் கொண்டுவர வேண்டும். "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன்" யோவா.14:13.

> நம்மிடமுள்ள குறை என்ன? தேவன் சமீபமாய் வர சங்கீதக்காரன் கூறும் நிபந்தனை என்ன? உண்மை யாய் அவரை நோக்கிக் கூப்பிட வேண்டும். ஆனால் நாம் வெதுவெதுப்பான ஜெபங்களை ஏறெடுத்துவிட்டு தேவன் நம்மிடம் வந்து உதவி செய்யவில்லை என்று குறை கூறுகிறோம்.

★ **நன்றாக கவனியுங்கள்.** கர்த்தருக்கு முன்பாக சமயத்தை அமைதியாக செலவு செய்வது அவசியம். எப்போதும் நாம் பேசிக்கொண்டே இருந்தால் அவர் பேசுவதைக் கேட்கமுடியாது. நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள் சங்.46:10. மேய்ப்பனின் குரலைக் கேட்க சமயம் செலவு செய்யாதபடியால் அநேக போதனைகளை இழந்துவிட்டோம். என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கும் யோ.10:27

★ **கீழ்ப்படியுங்கள்.** ஆண்டவர் உங்களி டம் பேசுகிறார் என்றும், அது வேத வசனத்திற்கு ஒத்தது என்றும் நீங்கள் உணர்ந்தால் உடனே செயல்படுங்கள். சிறிய காரியங்களில் நீங்கள் உண்மை யுள்ளவர்களாயிருந்தால் அவர் பெரிய காரியங்களில் உங்களை நம்புவார்.

★ **பிறரும் ஜெபிக்கிற ஜெபங்களுக்கு அவர்களே பதிலாயிருக்க விரும்பும்படி உற்சாகப்படுத்துங்கள்.** உங்கள் பிள்ளை களும், மற்றவர்களும் இயேசுவின் கரங்காகவும், கால் மகளாகவும் செயல்பட ஊக்குவியுங்கள்.

பிறருக்கு ஆசீர்வாதமாயிருக்க தேவன் உங்களை ஆசீர்வதித்திருக்கிறார். ஆபிரகாம் அதற்கு உதாரணம். ஆதி.12:1-3. இயேசு உங்களில் வாசம் பண்ணுவதை நீங்கள் உணர்ந்தால் அவர் எப்படி உங்கள் ஜெபத்திற்கு நீங்களே பதிலாயிருக்க முடியும் என்பதை உங்களுக்குக் காண்பிப்பார்.

## பத்திரிகை செய்திகள்

குமரி மாவட்டத்தில்

### விமான நிலையத்துக்கான ஆய்வுப் பணிகள் தீவிரம்

சாமிதோப்பில் விமான நிலையத்துக் கான ஆய்வுப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. அதனை விஜயகுமார் எம்.பி. நேற்று பார்வையிட்டார்.

**ரூ.11 1/2 லட்சம் ஒதுக்கீடு**

குமரி மாவட்ட அ.தி.மு.க செயலாளரும், எம்.பியுமான விஜயகுமார், இந்த மாவட்டத்தில் விமான நிலையம் அமைப்பதற்கு தமிழக அரசு மூலமாக பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறார். அதைத்தொடர்ந்து குமரி மாவட்டம் சாமிதோப்பில் விமான நிலையம் அமைப்பதற்கு தமிழக அரசு முதல் கட்ட சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்ய. ரூ.11 1/2 லட்சம் ஒதுக்கீடு செய்தது.

இந்த நிலையில் சாமிதோப்பு பகுதியில் உள்ள 850 ஏக்கர் நிலத்தை அளவீடு செய்து கல் நாட்டும் பணிகளும், சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்யும் பணிகளும் கடந்த சில நாட்களாக நடந்து வருகிறது. தனியார் நிலங்கள் பாதிக்காத வகையில் நாகர்கோவிலைச் சேர்ந்த ஒரு தனியார் என்ஜினியரிங் நிறுவனத்தால் செயற் கைக்கோள் உதவியுடன் இப்பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

**ஆய்வு**

இந்த பணியை விஜயகுமார் எம்.பி. நேற்று நேரில் சென்று ஆய்வு செய்தார். அப்போது அவர் நில அளவீடு பணி, எல்கைகளை அடையாளம் காண கல்நாட்டும் பணி மற்றும் சாத்தியக்கூறு ஆய்வுப்பணி ஆகியவற்றை ஆய்வு செய்தார். பின்னர் அங்கு ஆய்வை மேற்கொண்டு வரும் தனியார் நிறுவன என்ஜினியர்கள், பணியாளர்களிடம் விவரங் களை கேட்டறிந்தார்.

**மார்ச் மாத உபவாச ஜெபம்**

Heart Cry for Holy Spirit Revival

**எழுப்புதலுக்காக இதய கதறல் - 2018**

(உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : 17-03-2018
3- வது சனிக்கிழமை
சமயம் : காலை 10.00 மணி முதல்
மாலை 5.00 மணி வரை
இடம் : A.G. சபை,
அரியாங்குப்பம், பாண்டிச்சேரி
தொடர்பு : பாஸ்டர் அன்டோனியோ
மொபைல் : 99 94 11 72 60

Registered with the Registrar of News Paper
For India under R.N.I. TN TAM 11967/'67
Date of Publication : 27th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To